**செய்தி வெளியீடு எண்: 678** **நாள்: 14.11.12**

**ஒருங்கிணைந்த மருந்தாளுநர் பட்டயப்படிப்பு மற்றும் நர்சிங் தெரபிஸ்ட் பட்டயப்படிப்பு பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் விற்பனைக்கான கடைசித் தேதி 15–11–2012 இல் இருந்து 28–11–2012 வரை நீட்டிப்பு**

பாளையங்கோட்டை மற்றும் சென்னை,அரசு சித்த மருத்துவக்கல்லூரிகளில் 2012–2013 ஆம் கல்வியாண்டிற்கான இரண்டரை ஆண்டு கால அளவுள்ள ஒருங்கிணைந்த மருந்தாளுநர் பட்டயப்படிப்பு மற்றும் நர்சிங் தெரபிஸ்ட் பட்டயப்படிப்பு பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள், கீழ்க்கண்ட அரசு மருத்துவக்கல்லூரிகளில் முறையே,

1. சென்னை, அரும்பாக்கத்திலுள்ள அரசு சித்த மருத்துவக்கல்லூரி,
2. பாளையங்கோட்டையிலுள்ள அரசு சித்த மருத்துவக்கல்லூரி,
3. மதுரை, திருமங்கலத்திலுள்ள அரசு ஓமியோபதி மருத்துவக்கல்லூரி,
4.நாகர்கோவில்,கோட்டாரிலுள்ளஅரசுஆயுர்வேதா மருத்துவக் கல்லூரிகளில் கடந்த 29.10.2012 முதல் வழங்கப்பட்டு வருகிறது. விண்ணப்பம் பெற தனியர் மேல்நிலைப்பள்ளி தேர்வில் முதன் நேர்வில் அறிவியல் பாடங்கள் எடுத்து தேர்ச்சி பெற்றவராய் இருத்தல் வேண்டும். மேலும் தனியர் ரூ.350/–க்கான (ரூபாய் முந்நூற்று ஐம்பது மட்டும்) “இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை-106” (Director of Indian Medicine and Homoeopathy, Chennai-106) என்ற பணியிட பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஏதேனும் ஒன்றில் பெறப்பட்ட கேட்பு வரைவோலை கொடுத்து நேரில் பெற்றுக்கொள்ளலாம். மாணவர்கள் நலன் கருதி மேற்படி பட்டயப்படிப்புகளுக்கு விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசி நாள் 28.11.2012 வரை நீட்டிப்பு செய்யப்படுகிறது.

2. தமிழ்நாட்டைச் சேர்ந்த பட்டியல் வகுப்பினர் / பட்டியல் வகுப்பினர் அருந்ததியினர் / பட்டியல் பழங்குடியினர் மேற்படி விண்ணப்ப படிவத்திற்கான தொகை ரூ.350/-ஐ செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர். அவர்கள் விலையில்லா விண்ணப்பப்படிவம் பெற, அத்தாட்சிப் பெற்ற தங்கள் சாதி சான்றிதழின் நகல் மற்றும் +2 மதிப்பெண் சான்றிதழ் நகலுடன் கேட்புக் கடிதம் ஒன்றைத்தரவேண்டும்.

3. தகவல் குறிப்பேடு மற்றும் விண்ணப்ப படிவங்களை “http/www.tnhealth.org” என்ற எங்களது இணைய தள முகவரியில் இருந்து

பதிவிறக்கம் செய்து மேலே குறிப்பிட்டவாறு கேட்பு வரைவோலையினை இணைத்தும் சமர்ப்பிக்கலாம்.

4.பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 28.11.2012 மாலை 5.00 மணிக்குள்ளாக சென்னை, அரும்பாக்கம், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்திலுள்ள இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை தேர்வுக்குழு அலுவலகத்தில் மட்டுமே நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் அஞ்சல் துறை மற்றும் கொரியர் நிறுவனத்தில் கடைசி நாளுக்கு முன் தேதியில் பதிவு செய்திருந்தாலும் குறிப்பிட்ட இறுதி நாள்(28.11.2012 மாலை 5.00 மணி) மற்றும் நேரத்திற்கு பின்னர் வந்து சேரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இது குறித்து எவ்வித கடிதத் தொடர்பும் வைத்துக்கொள்ளப்படமாட்டாது.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**